## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 79. ஸ்ரீமான் ஏக் நாத்ஜி

பாண்டுரங்க அன்பர்களில் மிகவும் முன்னோடிகளில் ஒருவர் ஏக் நாத் மஹாராஜ்.அபங்கம் மூலம் ஆன்மீக பக்தி நெறியைப் பரப்பிய மஹான் இவர்.

தீண்டாமையை எதிர்த்துப் போராடிய சமூஹ சீர்திருத்தப் பெரியார் இவர்.

**பண்டரீபுரத்தை முற்றுகை இட வேண்டும்...**
விஜயநகர சாம்ராஜ்யத்தில் வாழ்ந்த மஹான் ஸ்ரீபானுதாஸ். இவரது காலத்தில் அப்பகுதியை ஆண்ட அரசர் ராமராயர் பண்டரீபுரத்தை முற்றுகையிட்டு, மூல மூர்த்தியை ஹம்பியில் விட்டல் கோயிலில் ப்ரதிஷ்டை செய்யத் துணிகிறார்.

அப்போது பானுதாஸ் உண்மையில் மூலமூர்த்தி என்பது எது என்ற ஆன்மீக தத்துவத்தை மன்னனுக்கு உணர்த்தி, அவனை முற்றுகையைக் கைவிடச் செய்தார்.அவரது வழிகாட்டலின் பேரில் ராமராயர் இன்று காணும் விக்ரஹத்தை ப்ரதிஷ்டை செய்தாராம்.

பிற்காலத்தில் பண்டரீநாதனின் ஆபரணம் ஒன்றை இவர் ஆஸ்ரமம் திருடியதாக இவர் மீது வழக்க தொடுக்கப் பட்டு, அவரைக் கழிவில் ஏற்ற அரச ஆணை உண்டானபோது, வழுக்கு மரம் அனைவரும் காண பசுமையான பூமரம் ஆனதாம்.

பானுதாஸின் மகன் சூர்யநாராயணன். அவரது ஒரே மகன் தான் ஏக் நாத்.

**உயர்ந்த குணங்கள்:**
* சிறுவனாக இருக்கும் போதே ஏழைகளுக்கு உதவுவதில் மிகவும் கவனம் செலுத்தியவர் இவர்.

* தன் தாத்தா மறைந்ததால், வேறு குருவைத் தேடி பைடனிபூர் சென்றார், ஜனார்த்தன மஹாராஜ் என்பவரின் ஆத்மார்த்த சீடர் ஆனார்.

* **கணக்கில் weak ஐயா!**
ஆஸ்ரமத்தின் கணக்கு வழக்குகளைப் பார்க்கும் பணி ஏக் நாத்தின் பணி.இவருக்கோ கணக்கு சரியாக வராது.இதை குருவும் அறிவார்.ஒரு நாள் இரவு முழுவதும் கணக்கு வழக்கு பார்த்தும் ஒழுங்காக வராத காரணத்தால் இவர் அழுதார்.அப்போது குரு ஆறுதல் சொல்ல, ”மஹாராஜ்! கூட்டலும் கழித்தலும்

பெருக்கலும் வாழ்வின் பாவத்தையும் புண்ணியத்தையும் ஆன்மீக பலத்தை அதிகரிப்பதிலும் இருக்க வேண்டும் என்றல்லவா உங்களை அடைந்தேன்?!" என்று கூறிட, அதன் மூலம் இவரது வைராக்யம் உணர்ந்த ஜனார்த்தனர் ஸ்ரீராம தாரக மந்த்ரோபதேசம் செய்தார்.

* ஸ்ரீமத் வால்மீகி ராமாயண காவியத்தை மஹாராஷ்ட்ரா மொழியில் அனைவரும் படித்து உணர்ந்து விழிப்புணர்வு பெறும் வண்ணம் ஏக் நாத் அதை எழுதினார்.அதே போல் ஸ்ரீமத் பாகவதத்தையும் எழுதினார்.அபங்கங்கள் மூலம் பக்தியைப் பரப்பினார்.அவருடைய அபங்கம் பாடப்பட்டே இன்றும் பண்டரீபுரத்தில் ஹாரத்தி காட்டுவது வழக்கம்.

* இவர் சதா தன் வாழ்க்கையை இரு மஹாகாவியங்கள் எழுதுவதில் ஈடுபட்டபோது தன்னுள் ப்ரஹ்மத்தை முற்றிலும் உணர்ந்த காண்டியா என்ற கீழ்ச்சாதி இளைஞன் இவரது ஆஸ்ரமத்தில் இவருக்கு அனைத்து விதமான கைங்கர்யங்களும் செய்தான்.

* அவன் மூலம் தான் பன்னிரண்டு ஆண்டுகள் ஆஸ்ரமத்தில் ஏக் நாத்தின் பணியாளனாக இருந்ததை நாம் தேவருக்குப் பாண்டுரங்கன் உணர்த்தினான்.

* அத்வைத்த தத்துவத்தை ஸ்ரீமத் ராமாயணத்தின் மூலம் உணர்த்தினார்.

* குறிப்பாக சுந்தர காண்டம் சொல்லும் போது ஹனுமானின் விஸ்வரூப தரிசனத்தைக் கண்முன் கொண்டு வந்து விடுவார் ஏக்நாத் மஹராஜ்!

* இவரது ஆசீர்வாதமே இன்று நாமும் பக்த விஜயத்தை மீண்டும் காலச்சூழலுக்கு ஏற்ப எழுதுகிறோம்.

ஹரி ஓம்!